# நற்றமிழ்க்குடில்

## தமிழால் தழைக்கும் உலகு

## மாணவ இலக்கிய மின்னிதழ்

**மார்ச் 2023**

**குடில் 5**

**விருந்து 16**




தமிழ்த்துறை

சோகா தமிழ்ப் பேரவை வெளியீடு



சோகா இகெதா கலை மற்றும்  அறிவியல் மகளிர் கல்லூரி

சேது பாஸ்கரா நகர், மாதனாங்குப்பம், சென்னை 600 099.

# நற்றமிழ்க்குடில்

## தமிழால் தழைக்கும் உலகு

**மாணவ இலக்கிய மின்னிதழ்**

குடில் 5

விருந்து 16

மார்ச் 2023

## தமிழ்த்துறை

**சோகா தமிழ்ப்பேரவை வெளியீடு**

சோகா இகெதா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி

சேது பாஸ்கரா நகர், மாதனாங்குப்பம், சென்னை 600 099.

# நற்றமிழ்க்குடில்

| | | |
|---|---|---|
| ஆசிரியர் குழு | : | ரா. பிரியதர்ஷினி, இளங்கலைத்தமிழ், மூன்றாமாண்டு<br>பா. பவித்ரா, இளங்கலைத்தமிழ், மூன்றாமாண்டு<br>மோ. ஐஸ்வரியா, முதுகலைத்தமிழ், முதலாமாண்டு<br>வி. மாரிகவிதா, இளங்கலைத்தமிழ், இரண்டாமாண்டு<br>து. லீலாவதி, இளங்கலைத்தமிழ், இரண்டாமாண்டு |
| ஆலோசனைக் குழு | : | டாக்டர் சேது குமணன், கல்லூரித் தலைவர்<br>முனைவர் மீரா முருகேசன், கல்லூரி முதல்வர்<br>முனைவர் கண்மணி சுப்பிரமணியன், கல்லூரித் துணை முதல்வர்<br>முனைவர் தே. இராணி எலிசபெத், தமிழ்த்துறைத் தலைவர்<br>தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் |
| வெளியீடு | : | தமிழ்த்துறை<br>சோகா தமிழ்ப்பேரவை வெளியீடு<br>சோகா இகெதா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி<br>சேது பாஸ்கரா நகர், மாதனாங்குப்பம், சென்னை 600 099. |
| *Blog* | : | *sokatamil blogspot.com* |
| *Facebook* | : | *Soka Tamil Avai* |
| *Youtube* | : | *Sokatamilavai* |
| *E.mail* | : | *sokatamilavai2023@gmail.com* |

# நற்றமிழ்க்குடில்

## தமிழால் தழைக்கும் உலகு

### மாணவ இலக்கிய மின்னிதழ்

குடில் 5

விருந்து 16

மார்ச் 2023

# உள்ளே....

தலையங்கம்

மலரே

கட்டுரை

நூல் அறிமுகம்

பழமொழி நுண்பொருள்

அறிவியல் செய்திகள்

உணவே மருந்து

விடுகதைகள்

பொன்மொழிகள்

கடித இலக்கியம்

சிறுகதை

சொல் விளையாட்டு

கவிதைகள்

தூரிகைத் தூரல்

துறை நிகழ்வுகள்

## தலையங்கம்

### பன்னாட்டு மகளிர் நாள்

மகளிர் நாள் ஆண்டுதோறும் மார்ச் திங்கள் 8ஆம் நாள் கொண்டாடப்பட்டு வருகிறது. மகளிர் நாள் எப்போது உருவானது ஏன் கொண்டாடப்படுகின்றது என்பனவற்றை ஆராய்வோம்.

ஒவ்வொரு ஆண்டும் மகளிர் தங்கள் உரிமைகளை முன் வைப்பதற்காக நடத்திய போராட்டங்கள் மாநாடுகள் இதனைத் தொடர்ந்து மகளிர் நாள் உருவானது.

1848ஆம் ஆண்டு இரண்டு அமெரிக்கப் பெண்கள் நூற்றுக்கணக்கான மக்களோடு இணைந்து பெண்களின் உரிமைக்காக மாநாடு நடத்தினர். 1908ஆம் ஆண்டு தங்களது பணிச்சூழல்களை எதிர்த்துப் போராடிய பின்னலாடை தொழில் செய்யும் பெண்களைப் போற்றும் வகையில் மகளிர் நாள் கொண்டாடப்பட்டது. இரஷ்யாவில் பெண்கள் உணவு மற்றும் அமைதிக்காகப் பிப்ரவரி மாதத்தின் இறுதி ஞாயிற்றுக் கிழமையன்று போராட்டம் நடத்தினர். க்ரீகோரியன் நாட்காட்டியின்படி இந்த நாள் ஐரோப்பிய நாடுகளில் மார்ச் 8ஆம் நாளாகக் கணக்கிடப்படுவதால் காலப்போக்கில் அந்நாளே பன்னாட்டு மகளிர் நாளாக

கொண்டாடப்படுகிறது. 1977ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை பன்னாட்டு மகளிர் நாளை அதிகாரப்பூர்வமாக அங்கீகரித்தது.

அமெரிக்காவில் நியூயார்க் நகரில் துணி ஆலைகளில் பெண்கள் மூன்று டாலர் ஊதியத்திற்கு வாரம் 81 மணி நேரம் வேலை செய்தனர். அதிக வேலை புரிந்து குறைவான ஊதியம் பெறுவதனால் பல்வேறு சிக்கல்களுக்கு உள்ளாகினர். எனவே ஆண்களுக்கு நிகரான ஊதியம் தங்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்றும், பணி நிலைமைகள் மேம்பாடு செய்யப்பட வேண்டும் என்றும், பெண்களுக்கும் சனநாயக உரிமைகள் வழங்கப்பட வேண்டும் போன்ற பல கோரிக்கைகளை முன்வைத்து அமெரிக்காவில் உள்ள மான்ஹெட்டன் நகரில் 1908ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 8ஆம் நாள் ஆயிரக்கணக்கான பெண் தொழிலாளர்கள் ஒன்றிணைந்து ஆர்ப்பாட்டம் செய்தனர்.



ப. கிருத்திகா, இளம் வணிகவியல், முதலாமாண்டு

இந்த ஆர்ப்பாட்டம் உலகம் முழுவதும் உள்ள உழைக்கும் வர்க்கப் பெண்களையும் போராட்டத்தில் ஈடுபட செய்தது. 1910 மார்ச்

8ஆம் நாள் இந்தப் போராட்டத்தின் முடிவாக அவர்களது கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டன.

## மகளிர் நாள் கொண்டாடப்படுவதற்கான காரணங்கள்

சமுதாயத்தில் பெண்களுக்குச் சமஉரிமை வழங்குவதையே முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது. இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பெண்கள் 16 மணி நேரம் வேலை செய்தனர் ஆனால் மிகவும் குறைந்த அளவு ஊதியமே வழங்கப்பட்டது. எந்தத்துறையிலும் பெண்களுக்கு எதிரான பாகுபாடுகளைத் தடுக்கவும், ஒவ்வொரு பெண்ணுக்கும் அவர்களின் உரிமைகள் வழங்கப்படவும் இந்நாள் கொண்டாடப் படுகிறது.

## 2023 மகளிர் நாள் கருபொருள்

2023ஆம் ஆண்டு பன்னாட்டு மகளிர் நாளுக்கான கருபொருள் “பாலினச் சமத்துவத்திற்கான புதுமை மற்றும் தொழில்நுட்பம்”. இந்த ஆண்டு 111ஆம் ஆண்டு மகளிர் தினம் ஆகும். 23 மார்ச் திங்கள் நடைபெற்ற ஐ.நா. கூட்டத்தின் இறுதி ஒப்பந்தத்தில், நிலையான வளர்ச்சிக்குக் கிராமப்புறப் பெண்கள் மற்றும் சிறுமிகள் முக்கியமானவர்கள் என்றும், அவர்களுக்கு உரிமைகள் மற்றும் அதிகாரங்கள் அளிக்கப்பட வேண்டும் என்றும் ஆணையம் வலியுறுத்தியது. ஒரு பரந்த அளவிலான உறுதியான அடுத்த படிகள்

மற்றும் பரிந்துரைகள் ஒப்புக்கொள்ளப்பட்ட முடிவுகளில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

- நிலம் மற்றும் இயற்கை வளங்கள், சொத்து மற்றும் பரம்பரை உரிமைகள் உள்ளிட்ட பொருளாதார மற்றும் உற்பத்தி வளங்களில் பெண்களுக்குச் சமமான அனுகளைப் பெறுவதற்கான பாரபட்சமான சட்டங்கள் மற்றும் விதிமுறைகளை அகற்றுவதற்கான சீர்திருத்தங்களை ஏற்றுக்கொள்வது.



பி. ராஜேஸ்வரி
இளங்கலைப் பொருளாதாரம், இரண்டாமாண்டு

- கிராமப்புறங்களில் இடைநிலை மற்றும் மூன்றாம் நிலைக் கல்வியில் பாலின இடைவெளிகளை மூடுவது உட்பட அனைத்து நிலைகளிலும் வலுவான கல்விச் சூழலை ஏற்படுத்துவது.
- தரமான சமூகச் சேவைகள் மற்றும் பராமரிப்புச் சேவைகளை வழங்குதல், கிராமப்புறப் பெண்கள் மற்றும் சிறுமிகளின் ஊதியமற்ற பராமரிப்பு மற்றும் வீட்டு வேலைகளின் சமமற்ற பங்கைக் குறைக்க, கிராமப்புறப் பெண்களுக்குச் சம மதிப்புள்ள வேலைக்குச் சம ஊதியத்துடன் கண்ணியமான வேலைகள்

கிடைப்பதை உறுதி செய்தல், மேலும் அவர்கள் வீடுகள் முதல் சமூக மன்றங்கள் வரை அனைத்து முடிவுகளிலும் சமமாகப் பங்கேற்பதை உறுதி செய்தல்.

இது போன்ற இன்னும் பல பரிந்துரைகள் இவ்வாண்டு கூட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ளன.

## பெண்களின் உரிமைகள்

அரசியல் சட்டத்தை வடிவமைத்த டாக்டர். பி.ஆர். அம்பேத்கரின் நேர்மையான முயற்சியின் பலனாக இன்று பெண்களுக்குப் பல உரிமைகள் கிடைத்திருக்கின்றன. அவற்றைப் பெண்களாகிய நாம் அறிந்துக் கொள்வது இன்றியமையாததாகிறது.

- 1955ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பெற்ற இந்துத் திருமணச் சட்டப்படி பெண்களின் திருமண வயது 17ஆக அறிவிக்கப்பெற்று, தற்பொழுது 21ஆக அறிவிக்கப்பட்டுப் பின்பற்றப்படுகின்றது.



ம. மதுமிதா,
இளம் வணிகவியல்,
முதலாமாண்டு

- 1956ஆம் ஆண்டு இந்து வாரிசுரிமைச் சட்டத்தில், பெற்றோர்களின் சொத்துக்களை அடைய பெண்களுக்கு உரிமை வழங்கப்பட்டுள்ளது.

- 1961ஆம் ஆண்டு வரதட்சணை தடுப்புச் சட்டம் (1984இல் திருத்தப்பட்டது). வரதட்சணை வாங்குபவர்களுக்குச் சிறை தண்டணையுடன் கடுந்தண்டணைகளை அளிக்கின்றது.
- 1956ஆம் ஆண்டு இந்து விதவைகள் மறுமணச் சட்டம், இந்து விதவைகள் (கைம்பெண்கள்) மறுமணத்தை அங்கீகரிக்கின்றது.
- இந்து திருமணச் சட்டம் (1964இல் தமிழக அரசின் திருத்தச் சட்டப்படி) சுயமரியாதைத் திருமணங்களுக்குச் சட்டரீதியான அங்கீகாரம் அளிக்கிறது.
- 1989ஆம் ஆண்டு இந்து வாரிசுரிமைச் சட்டம் (தமிழக அரசின் திருத்தச் சட்டம்) பெண்களுக்குப் பரம்பரை சொத்தில் சம பங்குரிமை.
- தமிழக அரசின் 1999ஆம் ஆண்டு பெண்களைக் கண்ணியமற்ற முறையில் சித்தரிப்பதைத் தடை செய்யும் சட்டம், இதனால் வாரப்பத்திரிகைகள், சுவரொட்டிகள், விளம்பரப் பலகைகள், ஊடகங்கள் போன்றவைகளில் பெண்களைக் கண்ணியமற்ற முறையில் சித்தரிப்பதை, விளம்பரப்படுத்துவதைத் தடை செய்கின்றது.

- 1961 மகப்பேறு நலச் சட்டம், மகப்பேறு காலத்தில் பெண்கள் விடுப்பு எடுக்கவும், அக்காலத்தில் ஊதியம் பெறவும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

## மாநில மகளிர் ஆணையம்

1992ஆம் ஆண்டு சனவரி 31ஆம் நாள் மாநில மகளிர் ஆணையம் அமைக்கப்பட்டது. பெண்களுக்கு உரிய அதிகாரம் வழங்குவதையே நோக்கமாகக் கொண்டு மாநில மகளிர் ஆணையம் ஆண்டு முழுவதும் ஓய்வின்றி உழைத்து வருகிறது.



ச. மீரா
இளம் வணிகவியல்
முதலாமாண்டு

1990ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட மாநில மகளிர் ஆணையச் சட்டத்தின் கீழ் சட்டபூர்வ அமைப்பாக, இந்த ஆணையம் இந்தியாவில் உள்ள பெண்களின் நலனைப் பாதுகாப்பதற்காக ஏற்படுத்தப்பட்டது.



பெண்களின் நலன் மற்றும் மேம்பாடு சம்பந்தப்பட்ட அனைத்து நஅம்சங்களிலும் இந்த ஆணையம் முக்கியப் பங்காற்றுகிறது. அரசியல் சாசனப்படியும், சட்டப்படியும் பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்புகள் சம்பந்தப்பட்ட அனைத்தையும் ஆய்வு செய்தல், கண்காணித்தல் போன்றவற்றில் மாநில மகளிர் ஆணையம் முக்கியப் பங்காற்றுகிறது.

பெண்களின் நலன் தொடர்பாகத் தற்போதுள்ள சட்டங்கள் அனைத்தையும் ஆய்வு செய்யும் இந்த ஆணையம், அந்தச் சட்டங்களில் எங்கெல்லாம் குறைகள் மற்றும் பலவீனங்கள் இருக்கின்றனவோ அவற்றை ஆய்வுசெய்து தேவையான திருத்தங்களைச் செய்ய பரிந்துரைக்கிறது. இவை தவிர, எத்தகைய புதியச் சட்டங்கள் கொண்டுவரப்பட வேண்டும் என்பது குறித்த பரிந்துரைகளையும் மாநில மகளிர் ஆணையம் வழங்குகிறது. பெண்களின் உரிமைகள் பறிக்கப்படுவது சம்பந்தப்பட்ட புகார்களைப் பெற்று அவற்றின் அடிப்படையிலும், குற்றச் செயல்களை அறிந்து தாமாகவும் அறிவிப்பு அனுப்பி நடவடிக்கை எடுக்கிறது.

உரிமைகள் பறிக்கப்படும்போது அவர்களுக்குத் தேவையான உதவி, ஆதரவு, சட்டக் கவனிப்பு ஆகியவற்றை வழங்க வேண்டும் என்பதற்காகவே மாநில மகளிர் ஆணையம் இவ்வாறு செய்கிறது.

பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ள அரசியல் சாசன மற்றும் சட்டப் பாதுகாப்புகளை ஆய்வு செய்வது, சட்டத் தீர்வுகளைப் பரிந்துரைப்பது, குறைகளைத் தீர்க்க உதவி செய்வது, பெண்கள் சம்பந்தப்பட்ட அனைத்துக் கொள்கைகளிலும் அரசுக்கு அறிவுரை வழங்குதல் ஆகியவை மாநில மகளிர் ஆணையத்தின் முதன்மைப் பணிகள் ஆகும்.

பல ஆண்டு கால, பல பெண்களின் போராட்டங்களுக்குப் பிறகு பெண்களின் நிலையில் மாற்றம் ஏற்பட்டு உரிமைகள் வழங்கப்பட்டன. பெண்களுக்கான சட்டங்களும் இயற்றப்பட்டன. முன் காலத்தை ஒப்பிடும் போது பெண்களின் வாழ்க்கை முறையில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்பது மறுக்க முடியாததாகும்.

இன்னும் பல உரிமைகள் சட்டங்கள் சட்ட நூல்களில் அச்சடிக்கபட்ட நிலையிலே உள்ளன, நடைமுறையில் இல்லை என்பது நாம் அறிந்ததே. சட்டங்கள் வகுத்தும் உரிமைகள் வழங்கப்படாததால்தான் ஆணையங்கள் அமைத்து, சட்டங்களையும் உரிமைகளையும் பாதுகாக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

பெண்களுக்கான உரிமை சட்டங்கள் இயற்றபட்டுவிட்டன என்பதற்காக அல்ல, சக மனிதன் அல்லது நான் எந்த உரிமைகளைப் பெறுகிறேனோ, அனுபவிக்கிறேனோ, அது என் போன்ற அனைவருக்கும் சமமாகக் கிடைக்க வேண்டும் என்ற மனநிலை ஏற்பட்டாலே சட்டங்கள் இல்லாமலே உரிமையும் பாதுகாப்பும் நிலைநிறுத்தப்படும். இந்நிலை தற்போது இல்லாவிட்டாலும் பெண்களாகிய நாம் நம் அடுத்த தலைமுறையினருக்கு இதனைக் கற்பித்து நம் சமூகத்தையும் உயர்த்துவோம்.

ம. ஐஸ்வர்யா, முதுகலைத் தமிழ், முதலாமாண்டு

## மலரே

### கூவிளம் பூ

குறிஞ்சிப்பாட்டில், கூவிளம் என்ற கபிலரின் சொல்லுக்கு நச்சினார்க்கினியர் வில்வப்பூ என்று உரை எழுதியுள்ளார். வில்வம், இளகம், வில்லை, குசாபி. வில்வ வேர் சித்த மருத்துவ மூலங்களுள் ஒன்றாகும்.



இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய பழமையான மரம் வில்வ மரம். இம்மரம் இந்தியா, இலங்கை, ஆசிய நாடுகளில் செழித்து வளர்கிறது. சைவ சமய மரபுகளில் வில்வ மரம் முக்கிய பங்கு வகிக்கிறது. சிவபெருமானுக்கு இம்மரத்தின் இலைகளை மாலையாக அணிவிப்பர். இது, வில்லை, குசாபி, கூவிளம் எனப் பல்வகைப் பெயர்களில் வழங்கப்படுகிறது.

வில்வமரம் மகாவில்வம், அகண்ட வில்வம் என இருவகைகளில் உள்ளது. மூன்று இலைகளுக்கு மேல், கொத்தாக ஐந்து அல்லது ஏழு இலைகளுடன் இருப்பது மகாவில்வ மரம்.

கடையேழு வள்ளல்களில் ஒருவனான எழினியின் குடிப்பூ கூவிளம். திருஞானசம்பந்தர் வில்வமரத்தைத் தெய்வமாகப்



போற்றுகிறார். திருவையாறு, திருவல்லம், திருஆனைக்கா என நூற்றுக்கும் மேற்பட்ட கோயில்களில் போற்றப்படும் தல மரம் வில்வ மரம். ஒரு வில்வ இலையை இறைவனுக்குக் காணிக்கையாக்குவது அஸ்வமேத வேள்வி செய்த பலனைத் தரும் என்கிறார்கள். ஆண்டிற்கு 400 பழங்கள் வரை காய்க்கும். சித்த மருத்துவத்தில் சிறந்த மூலிகையாக விளங்குகிறது. மூக்கடைப்பு, அஜீரணம், காசம், மன அழுத்தம், உடல் ஆரோக்கியம், சர்க்கரை நோய், மூலம், குடல் கோளாறு, வீக்கம், கபம், ஆஸ்துமா, வெள்ளைப்படுதல் ஆகியவற்றுக்கு அருமருந்தாக உள்ளது. இதன் இலை, பட்டை, வேர், பழம் என அனைத்துப் பகுதிகளும் மருத்துவப் பயன் நிறைந்தவை.

கூவிளம் கண்ணி கொடும் பூண் எழினியும் (புறம் 158/9)

கூவிள விறகின் ஆக்கு வரி நுடங்கல் (புறம் 372/6)

எனக் கூவிளம் குறித்த செய்திகள் சங்க இலக்கியங்களில் காணக்கிடைக்கின்றன.

கா. சுவாதி, இளங்கலைத் தமிழ், முதலாமாண்டு

## கட்டுரைகள்

### தமிழரின் வீர விளையாட்டு

தமிழர்களின் வீர விளையாட்டு சல்லிக்கட்டு ஆகும். பொங்கலின் இரண்டாம் நாள் மாட்டுப்பொங்கல் அன்று சல்லிக்கட்டு பல கிராமங்களில் நடைபெறுகிறது. தமிழனின் பண்பாட்டை எடுத்துக்காட்டும் ஜல்லிக்கட்டினைப் பற்றி விரிவாகக் காணலாம்.



### சல்லிக்கட்டின் சிறப்பு

விழாவின் போது மாட்டின் கழுத்தில் கட்டப்படும் வளையத்தின் பெயர் சல்லி ஆகும். முன்பு புழக்கத்தில் இருந்த ‘சல்லிக் காசு’ என்னும் நாணயங்களைத் துணியில் வைத்து மாட்டின் கொம்புகளில் கட்டிவிடும் பழக்கம் இருந்தது. மாட்டை அணைத்து அடக்கும் வீரருக்கு அந்தப் பணம் சொந்தமாகும். இதுவே சல்லிக்கட்டு என வழங்கப்பட்டு, பேச்சு வழக்கில் அது திரிந்து சல்லிக்கட்டு என்று ஆனது.

இவ்விளையாட்டு, ஏறு தழுவுதல், ஏறுகோள், மாடுபிடித்தல், ஜல்லிக்கட்டு, மஞ்சுவிரட்டு எனப் பலப் பெயர்களால் அழைக்கப்படுகிறது.

## மாட்டின் வகைகள்

காங்கேயம், உம்பளச்சேரி, புலிக்குளம், தேனி மலை மாடு, பர்கூர் மலை மாடு, ஆலம்பாடி, புலிக்குளம் வகைக் காளைகள் ஏறு தழுவலுக்கு அதிகம் பயன்படுத்தப்படுகின்றது.

## வரலாற்றில் சல்லிக்கட்டு

ஏறுதழுவுதல் பல நூற்றாண்டுகளைக் கடந்து தமிழனின் தொன்மையை, வீரத்தைக் காட்டுவதாக உள்ளது. பழந்தமிழ் இலக்கியங்களிலும் சிந்துவெளி நாகரிகத்திலும் ஏறுதழுவுதல் நிகழ்ந்ததற்கான சான்றுகள் உள்ளன. புதுடெல்லி மாநிலக் கண்காட்சியகத்தில் உள்ள சிந்துவெளி நாகரிகம் சார்ந்த முத்திரையில் காளை உருவமும் அதை அடக்க முயலும் வீரனை அக்காளைத் தூக்கி எறிவது போன்றும் சித்திரிக்கப்பட்டுள்ளது.

கலித்தொகை, முல்லைக்கலி, மலைபடுகடாம், பட்டினப்பாலை, சிலப்பதிகாரம், பெரும்பாணாற்றுப்படை இலக்கியங்களில் ஏறு தழுவுதல் பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன. அதிலும்,

கலித்தொகையின் முல்லைக்கலியில் ஏறு தழுவுதல் குறித்த செய்திகள் மிகுதியாக இடம்பெற்றுள்ளன.

ஸ்பெயின் போன்ற உலக நாடுகள் சிலவற்றில் எருது அடக்கும் விழா நடத்தப்படுகிறது. அவை விளையாட்டிற்காகவே நடத்தப்படுகின்றன. இவ்விளையாட்டு, வேலி ஜல்லிக்கட்டு, வாடிவாசல் ஜல்லிக்கட்டு, வடம் ஜல்லிக்கட்டு, மஞ்சு விரட்டு எனப் பலவகையாக விளையாடப்படுகிறது.

தமிழகத்தில் அலங்காநல்லூர், பாலமேடு, அவனியாபுரம், சிராவயல், சிங்கம்புணரி, அரளிப்பாறை, நார்த்தாமலை ஆகிய இடங்களிலும், திருச்சி, தேனி போன்ற தென்மாட்டங்களிலும் நடத்தப்படுகிறது.

தமிழரின் பண்பாட்டு அடையாளங்களில்,

அன்பின் அடையாளம் விருந்தோம்பல்!!

வீரத்தின் அடையாளம் சல்லிக்கட்டு!!

பாரம்பரியத்தைப் பேணிக் காப்போம்!!


வீரத்தைப் பறைசாற்றுவோம்!!

வெற்றிப் பாதையில் பயணிப்போம்!!

வி. மாரிகவிதா, இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு

## நூல் அறிமுகம்

### அ’னா ஆவன்னா




கவிஞர், திரைப்படப் பாடல் ஆசிரியர் நா. முத்துக்குமார் படைப்புகளில் ஒன்று, “அ’னா ஆவன்னா” என்ற கவிதை நூல். இக்கவிதை நூலில் கவிஞர், அன்றாட வாழ்வின் உயிர்த் துடிப்புள்ள சித்திரங்களை உருவாக்குகிறார். இந்தக் கவிதைகள் குமுதம் இதழில் தொடராக வெளிவந்து அனைவராலும் வரவேற்பைப் பெற்றவைகள்.

நூலில், 44 தலைப்புகளில் கவிதைகள் இடம் பெற்றுள்ளன. நண்பனின் தங்கையில்லாத வீடு நூற்றாண்டுகள் கடந்த மலைக்குகையின் மௌனத்துடன் இருக்கும் எனத் தொடங்கி,

சொந்த ஊருக்குச் செல்லும் ஒவ்வொரு நபரும் எதிர் கொள்ளும் மனநிலையை, நெடுநாட்கள் கழித்து சொந்த ஊருக்குச் செல்பவர்கள் எனும் கவிதை எடுத்துரைக்கிறது.

**பொருள்வயிற் பிரிவுக்கு முன்**
**ஒவ்வொரு அணுவும்**
**பரிச்சயமாயிருந்த சொந்த வீடு**
**சற்றே அந்நியமாகி**
**தங்கும் விடுதிபோல்**
**திகிலூட்டுகிறது**

கை நீட்டினால் தண்ணீர் வரும் குழாய் இதனைப் பார்த்த விவசாயி இதன் ஊற்றுக்கண் எங்கே? என விசாரிக்க எண்ணி நமக்கெதற்கு எனத் திரும்பி நடக்கிறார். அந்த விவசாயி மதிய வெயிலில் மிதந்து செல்லும்,

**மேகங்களை நோக்கி**
**கையை நீட்டி நீட்டி**
**தண்ணீர் வருமா? என்று**
**சோதித்துப் பார்க்கிறார்.**

நமது சொகுசு வாழ்க்கையும் விவசாயியின் தண்ணீர் இல்லா ஏக்கத்தையும் எதார்த்தமாகப் பதிவு செய்கிறார்.

வாழ்ந்து கெட்ட குடும்பம், குடும்பம் கவிதையில் சூதாட்டத்தில் பணத்தை இழந்து ஒன்றுமே இல்லாமல் அனைத்தும் விற்றாகி பக்கத்து ஊர் தொழிற்சாலைக்கு வேலைக்குப் போகும் பெண்கள் பற்றிக் கூறுகிறார்.

**காய்ப்பேறிய தங்கள் கைகளை**
**யாருமற்ற தனிமையில்**
**தடவிப் பார்த்துக் கொள்கின்றனர்**
**அதில் இன்னமும்**
**ஒட்டிக்கொண்டிருக்கின்றன**
**கொஞ்சமே கொஞ்சூண்டு**
**மருதாணியும் வைராக்கியமும்**

**எல்லோரும் ஒரு காலத்தில்**
**குழந்தையாக இருந்தாலும்**
**வளர்ந்த பின்**
**தொலைந்துவிடுகிறது**
**குழந்தைகளின் உலகத்தை**
**திறக்கும் சாவி.**

**யாரும் படிக்காத**
**கடிதங்களைப் போல்**
**மூடியே கிடக்கின்றன**
**குழந்தைகளுடனான**
**உரையாடல்கள்**

அவ்வரிகளைப் படிக்கும் போது ஆம் உண்மைதானே எனும் உணர்வு எழுகிறது.

**ஈராறு முப்பன்னண்டு**
**ஓரஞ்சு ரெண்டு**
**வெட்டுப்படவும்**
**வெட்டுக் கொடுக்கவுமென**
**கரைகிறது காலம்**
**கடைசி வரை**
**எல்லாப் பெண்களுக்கும்**
**பிடிபடுவதே இல்லை**
**சமையலறைக் கட்டங்களைத்**
**தாண்டி மலையேற**
**என்றைக்குத் தாயம் விழும்?**

பழம் விளையாட்டோடு பெண்ணின் நிலையையும் தாயத்தில் உருட்டிவிட்டிருக்கிறார் கவிஞர்.


ஒவ்வொரு கவிதையும் வாழ்வின் ஒவ்வொரு நிகழ்வுகளையும் மையமாகக் கொண்டது. நாம் வாழ்ந்த, நாம் அனுபவித்த, பார்த்த நிகழ்வுகளை, எதார்த்த கவிதையாக்கி நம்முடன் உறவாடுகிறார் கவிஞர்.

**பா. பவித்ரா, இளங்கலைத்தமிழ் மூன்றாமாண்டு**

## பழமொழி நுண்பொருள்

### ஆனைக்கு ஒரு காலம் வந்தால் பூனைக்கும் ஒரு காலம் வரும்

யானை போன்று வலிமை உடைய மனிதர்கள் ஒரு சில காலக் கட்டங்களில் வெற்றி பெற்றால், பூனையைப் போன்ற பலம் குறைந்தவர்களும் தகுந்த நேரம் வரும் போது வெற்றி பெறுவார்கள். அதாவது, வலிமையுடையோர்க்கு ஒரு காலம் வந்தால், எளியோர்களுக்கும் ஒரு காலம் வரும் என்ற பொருளில் இப்பழமொழி தற்போது பயன்பாட்டில் உள்ளது. ஆக, தற்போது இந்தப் பழமொழியின் சொற்களை யானை, பூனை என்று கொண்டு பொருள் கூறுகிறோம். இது திரிபடைந்த வடிவமாகும்.



## உண்மைப் பொருள்

"ஆ" நெய்க்கு ஒரு காலம் வந்தால் "பூ" நெய்க்கு ஒரு காலம் வரும் என்பதே உண்மையான பழமொழியின் வடிவம்.



"ஆ" என்றால் பசு என்பது பொருள். பசுவின் பாலில் இருந்து எடுக்கப்படும் நெய்யை இளமைக் காலத்தில் சாப்பிட்டு வந்தால் உடலுக்குப் பொலிவு ஏற்படும். 40 வயது வரை பசுவின் நெய்யைச் சாப்பிடலாம். அதற்கு மேல் சாப்பிட்டால் அது உடலில் கொழுப்பை அதிகரிக்கும்.

"பூ" நெய் என்றால் பூவினால் கிடைக்கும் தேன். 40 வயதிற்கு மேல் பூவில் இருந்து எடுக்கப்படும் நெய்யான தேனைப் பயன்படுத்துவதே நல்லது. இந்தத் தேனை முதுமைக் காலத்தில் உட்கொண்டால் உடலுக்கு எந்தவிதமான தீங்குகளும் ஏற்படாது.

இந்தக் கருத்தை உணர்த்தவே "ஆ நெய்க்கு ஒரு காலம் வந்தால் பூ நெய்க்கு ஒரு காலம் வரும்" என்று கூறியிருக்கிறார்கள் நம் முன்னோர்கள். இப்பழமொழியில் ஆநெய், பூநெய் ஆகிய இரண்டு சொற்களும் யானை, பூனை எனச் சொல் திரிபு ஏற்பட்டதால் பழமொழியின் பொருளிலும் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

உ. புவனபவித்ரா

இளங்கலைத் தமிழ் ,முதலாமாண்டு

## அறிவியல் செய்திகள்

## அன்றாட வாழ்வில் அறிவியல்

இன்றைய வாழ்வில் அறிவியல் இன்றியமையாததாகும். அன்றாட வாழ்வியலில் ஒவ்வொரு தருணத்திலும் அறிவியல் ஏதோ ஒரு வகையில் பின்னிப்பிணைந்துள்ளது. சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அறிவியலை ஆதாரமாகக் கொண்டு வாழ்கின்றனர். அன்றாட வாழ்வில் அறிவியல் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து வருகின்றது.

### கல்வியில் அறிவியல்

கல்வி தனிப்பட்ட மனிதனின் முன்னேற்றத்திற்கும் சமுதாயத்தின் வளர்ச்சிக்கும் இன்றியமையாத ஒன்றாகும். இத்தகைய கல்வி வளர்ச்சியில் அறிவியலின் பங்களிப்பு அளப்பரியதாகும். இன்று நாம் பயிலும் நூல்கள் அனைத்தும் அறிவியல் கண்டறிந்த அச்சுப்பொறியின் ஆக்கங்கள் ஆகும். வானொலி தொலைக்காட்சி இணையதளம் என்பன மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் பெரிதும் பங்காற்றுகின்றன. கல்விக்கு உதவும் ஆய்வு பரிசோதனை கருவிகள் அறிவியலின் கண்டுபிடிப்புகளே. இவை அனைத்தும் அறிவியல் கல்விக்கு அளித்த நன்கொடை. கல்விமட்டுமல்லாது வாழ்வின் அனைத்து மாற்றங்களுக்கும் அறிவியலே காரணமாக அமைகிறது.

## மருத்துவத்தில் அறிவியல்

மருத்துவத்துறையானது ஆராய்ச்சியின் உச்சத்தைத் தொட்டதுறை எனலாம். உயிர்காக்கும் இத்துறையில் வளர்ச்சி உலகிற்கு மிகவும் தேவைப்படும் ஒன்றாகும். கடவுளுக்கு அடுத்தபடியாக மருத்துவரை நம்புகின்றனர். மனிதனின் உயிர் மூச்சை மீண்டும் உலகிற்குக் கொண்டு வரும் வகையில் மருத்துவக் கண்டுபிடிப்புகள் வளர்ச்சி கண்டுள்ளன. மருத்துவ நுண்ணுயிர் கண்டுபிடிப்பு மருத்துவ ஆய்வுகள் அறுவை சிகிச்சை முறை போன்றவற்றில் பயன்படுத்தப்படும் புதிய புதிய கருவிகளும் முறைகளும் அறிவியலின் கொடைகளே.

## அன்றாட வாழ்வில் அறிவியல்

அன்றாட வாழ்வில் உணவு, உடை, தங்கும் இடம் இம்மூன்றும் இன்றியமையாத ஒன்றாகும். பெரிய பெரிய கட்டிடங்கள் யாவும் இன்று புதிய முறையில் கட்டப்படுகின்றன. செங்கற்களுக்குப் பதிலாக அவற்றைவிட உறுதியாகவும் சிக்கனமாகவும் கற்கள் கண்டுபிடிக்கப்படுகின்றன. ஒளி விளக்குகள், குளிர் தடிப்பு மின்விசிறிகள், உணவுப் பொருட்கள் கெடாமல் பாதுகாக்கும் குளிர்சாதனப் பெட்டிகள், சமையலுக்கு உதவும் மின் அடுப்புகள், சிறிய, பெரிய அரவைப் பொறிகள், துணிதுவைக்கும் இயந்திரம் என

எண்ணிலடங்காத அறிவியல் பொருட்களை அன்றாட வாழ்வியல் பயன்படுத்துகிறோம்.

## போக்குவரத்தில் அறிவியல்

மண்ணிலும் விண்ணிலும் நீரிலும் பல வகை போக்குவரத்து கருவிகள் அன்றாடம் பயணிக்கப் பயன்படுதப்படுகின்றன. பயணத்தை எளிதாக்கவும், விரைவாகப் பயணிக்கவும் பல போக்குவரத்துச் சாதனங்கள் உதவுகின்றன. மிதிவண்டி, புகைவண்டி, மகிழுந்து போன்ற போக்குவரத்து வாகனங்கள் அன்றாடம் நம் வாழ்வில் அதிகம் இடம்பெறும் அறிவியல் சார் பொருட்களாகும்.


## முடிவுரை

இவ்வாறான அன்றாட வாழ்வில் அனைத்துப் பொருட்களும் அறிவியல் படைப்புகள் ஆகின்றன. கலை, மருத்துவம், பொறியியல், போக்குவரத்து, கல்வி, பொழுதுபோக்கு இணையதளம் முதலிய துறைகள் என அனைத்திலும் அறிவியல் இடம்பெறுகிறது. இந்த அறிவியலின் மூலமாக எதிர்மறை விளைவுகளை மனிதன் சந்திக்கின்ற போதிலும் அதிக நன்மை நமக்கு அளிக்கின்றது அறிவியல் என்பது நிதர்சனமான உண்மையாகும்.

**து. லீலாவதி, இளங்கலைத்தமிழ், இரண்டாமாண்டு**

## *உணவே மருந்து*

க. சசிகலா
நிர்வாகவியல், மூன்றாமாண்டு



### *முன்னுரை*

உணவே மருந்து, மருந்தே உணவு, இதனைத் திருவள்ளுவர்,

**மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது**
**அற்றது போற்றி உணின்**

என்ற குறள் மூலம் சிறப்பாக விளக்கியுள்ளார். இந்தக் குறளுக்கான பொருள். உடலுக்கு எது பொருத்தமான உணவோ அதைத் தேர்ந்தெடுத்து உண்டால் நாம் நெடுநாள் எந்த நோயும் இல்லாமல் வாழலாம் என்பதாகும்.

### உணவு முறைகளும் நமது ஆரோக்கியமும்

நம் முன்னோர்கள் சுவர் இருந்தால்தான் சித்திரம் வரைய முடியும் என்று கூறியது போல, உடலில் நல்ல ஆரோக்கியம் இருந்தால்தான் நல்வாழ்வினை வாழ முடியும். பழ வகைகள், தானியங்கள், காய்கறிகள், ஊட்டச்சத்து நிறைந்தவை. இத்தகைய உணவு பழக்கம் மக்களிடம் குறைந்து வருகிறது. துரித உணவுகளையும் சத்தற்ற உணவுகளையுமே உட்கொள்கின்றனர்.

## இயற்கை உணவுகள்

இயற்கையான முறையில் கிருமி நாசினிகள் தெளிக்கப்படாத தானிய வகைகள், கிழங்குகள், கீரைகள், பசும்பால் உணவுகள், பழங்கள் போன்ற இயற்கையான உணவுகள் உடல் ஆரோக்கியத்திற்குச் சிறந்தன. இயற்கை சார்ந்த உணவுகளை அதிகமாக எடுத்துக் கொள்வதன் மூலம் உடலில் பிணி இல்லாமல் நீண்ட நாள் வாழ முடியும். முன் காலத்தில் இயற்கை உணவு செயற்கை உணவு, நல்ல உணவு தீய உணவு என்ற பாகுபாடுகள் எல்லாம் இல்லை. உணவு என்றாலே மனிதனின் பசியைப் போக்கி, உடலுக்கு வலுசேர்ப்பவையா இருந்தன. இன்று விற்கும் உணவில் மட்டும் அல்ல விளையும் உணவிலும் இயற்கையைத் தேட வேண்டிய நிலையில் உள்ளது.



ஆர். மரிய அன்னாள்

இளம் வணிகவியல், முதலாமாண்டு

## மாறிவரும் உணவு முறைகள்

இன்றையச் சூழலில் அனைவரும் உடலுக்குத் தீங்கு தரக்கூடிய ஜங்க் ஃபுட்ஸ், பாஸ்புட்ஸ் போன்ற துரித உணவுகளையே பெரிதும் விரும்பி உண்கின்றனர். அதிகம் விற்பனையாகும் பெப்சி, கொக்கோ கோலா போன்ற குளிர்பானங்கள் விளம்பர மோகத்தினால் அதிகம் பயன்படுத்தப்படுகிறது. குளிர்பானங்கள் மட்டுமல்லாது அனைத்து வகையான உணவுகளுமே நம்முடைய காலச் சூழலுக்கும் உடல் அமைப்பிற்கும் ஏற்புடையதாக இல்லாத உணவுப் பொருட்களையே விரும்புகிறோம். இத்தகைய உணவின் மீதான ஆசை மனிதனின் மனதையும் நாவையும்

அடிமைப்படுத்திவிடுகிறது. பின்னர் தவறு என்று அறிந்தாலும் இத்தகைய உணவுகளை உட்கொள்வதை மனிதனால் நிறுத்த இயலவில்லை.

## நோய் அதிகரிப்பு

நாம் எடுத்துக் கொள்கின்ற உணவு முறைகள்தான் நம்முடைய நீண்ட நாள் ஆரோக்கியத்திற்கு வழிவகுக்கும். சிறு வயதில் இருந்து உணவிற்கு மதிப்பு கொடுக்காமல் நாம் எடுத்துக் கொள்கின்ற ஆரோக்கியமற்ற உணவுகள்தான் அதிக அளவு நோய்க்குக் காரணமாக உள்ளன.

வள்ளுவர் கூறியபடி சரியான உணவை உட்கொண்டால் இந்த உடலிற்கு மருந்து என ஒன்றே தேவையில்லை. நோய் இருந்தால்தான் மருந்து, உணவே மருந்தானால் நோயில்லா நல்வாழ்வு கிட்டும்.

## முடிவுரை

மனிதன் இன்று பொருளாதார நிலை, தொழில்நுட்ப வளர்ச்சி, விஞ்ஞானம் இவற்றை மட்டுமே சிந்தித்து உடல் ஆரோக்கியம் பற்றி நினைத்துப் பார்ப்பதில்லை. உணவு முறையில் அதிக அக்கறை செலுத்த வேண்டும். இதனை, சரி செய்ய ஒரே வழி உண்டு. இயற்கை விவசாயத்தை மீட்டெடுக்க வேண்டும். இயற்கையோடு இணைந்த வாழ்வே இன்பத்தைத் தரும். மற்றவை துன்பமே.

**மு. வித்யா, முதுகலைத்தமிழ், இரண்டாமாண்டு**

## விடுகதைகள்

- காட்டிலே பச்சை; கடையிலே கறுப்பு; வீட்டிலே சிவப்பு. அது என்ன?
- என்னைத் தெரியாத போது தெரிந்து கொள்ளும் ஆவல். தெரிந்த பிறகு பகிர்ந்து கொள்ளும் ஆசை. நான் மறைக்கப்பட வேண்டியவன். நான் யார்?
- மழையோடு வருகின்ற மஞ்சள் புறாவை வெட்டினால் ஒரு சொட்டு இரத்தம் வராது. அது என்ன?



நூர் அஸ்மா பானு. எம்,
இளம் வணிகவியல் முதலாமாண்டு

- பட்டுப்பை நிறைய பவுன் காசு அது என்ன?
- கருப்பர்கள் மாநாடு போட்ட இடத்தில் கண்ணீர் பிரவாகம். அது என்ன?
- முதலெழுத்து தமிழின் அடுத்த எழுத்து கடை மூன்று சேர்ந்தால் ஒரு எண்ணிக்கை. மொத்தத்தில் இது வருமுன் எச்சரிக்கை தேவை?
- எட்டுக்கால் ஊன்றி இருகால் படமெடுக்க வட்டக் குடைபிடித்து வாறாராம் வன்னியப்பு அது என்ன?

- ☞ வெள்ளத்தில் போகாது, வெந்தணலில் வேகாது. கொள்ளையடிக்க முடியாது, கொடுத்தாலும் குறையாது. அது என்ன?
- ☞ பூவோடு பிறந்து; நாவோடு கலந்து விருந்தாவான் மருந்தாவான். அவன் யார்?
- ☞ தலைக்குள் கண் வைத்திருப்பவன் இவன் மட்டும்தான் அவன் யார்?

## சொல் விளையாட்டு – விடைகள்

பல்லாங்குழி, உறியடி, சடுகுடு, ஊஞ்சல், கூட்டாஞ்சோறு, பாண்டி, கில்லிதண்டு, பட்டம், தாயம், கோலி குண்டு, பச்சகுதிரை, ஆடுபுலியாட்டம்

## பொன்மொழிகள்



- மெதுவாகப் பேசு. அது உன் ரகசியங்களைப் பாதுகாக்கும். நல்ல எண்ணத்தோடு இரு. அது உன் நடத்தையைப் பாதுகாக்கும். - **வள்ளலார்**
- நாம் எப்போதுமே வாழ்வதற்குத் தயாராகிக் கொண்டிருக்கிறோம்; ஆனால் வாழ்வதில்லை. - **எமர்சன்**

ஜெ. நர்மதா
இளம் வணிகவியல், முதலாமாண்டு,

- ஊக்குவிக்க ஆளிருந்தால், ஊக்கு விற்கும் ஆள் கூட தேக்கு விற்பான். – **வாலி**
- பெரும் சாதனை செய்வதற்கு மூன்று நிலைகளைக் கடந்தாக வேண்டும். அவை ஏளனம், எதிர்ப்பு, அங்கீகாரம். – **விவேகானந்தர்**
- அறிவையும் முன்னேற்றத்தையும் தருகிறது சிந்தனை. சிந்தனைக்குச் செயல்வடிவம் கொடுத்தால்தான் சாதனை படைக்க முடியும். – **ஏ.பி.ஜே. அப்துல்கலாம்**
- வாழ்க்கை என்கின்ற மரத்துக்கு இளமையில் கற்பது வேர் போன்றது. – **திரு.வி.க.**
- முதியோர்களின் அறிவுரைகள் குளிர் காலச் சூரியனைப்போல் சுடாது ஒளிரும். - **அ. எர்மான்**
- வசந்தம் ஒரே நாளில் மலர்ந்து விடுவதில்லை. அதேபோல வாழ்வில், உயர்வும் ஒரே நாளில் கிட்டி விடாது. – **அரிஸ்டாட்டில்**
- உங்களுக்குக் காற்று தேவைப்படும் அளவுக்கு வெற்றி தேவைப்படும் போது, நீங்கள் அதை அடைவீர்கள். வெற்றிக்கு வேறு எந்த இரகசியமும் இல்லை. – **சாக்ரடீஸ்**

**க. ஷாயினாபேகம், முதுகலைத்தமிழ் முதலாமாண்டு**

## கடித இலக்கியம்

## பாராட்டுக் கடிதம்

அன்புள்ள தோழி வினோதினிக்கு,

நான் இங்கு நலம். உன் நலம், உன் பெற்றோர் நலம் அறிய ஆவல்!

உங்கள் கல்லூரியில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் உயரம் தாண்டுதல் பிரிவில் நீ முதலிடம் பெற்று வெற்றி பெற்றதை அறிந்து நானும் என் பெற்றோரும் பெரிதும் மகிழ்ச்சியடைந்தோம்.

நீ உன் தந்தையின் வேலை காரணமாக நீ வேறு கல்லூரிக்கு மாறுதலானதால் உன் விளையாட்டை என்னால் நேரில் காணவும் முடியவில்லை, என்னால் ஆரத்தழுவி வாழ்த்து சொல்லவும் முடியவில்லை. இந்த வெற்றி செய்தியினால் உன்னுடன் கடிதம் வழி பேசுவதில் மட்டற்ற மகிழ்ச்சி. நாம் நம் பள்ளி விளையாட்டு ஆண்டுவிழாவில் சேர்ந்து விளையாடிய நினைவுகளும் பெற்ற பதக்கங்களும் நீங்கா நினைவாக நெஞ்சில் வந்து படிகிறது.



ர. மோனிஷா, இளம் வணிகவியல், முதலாமாண்டு

உனக்கு எனது பாராட்டுகள். நீ இன்னும் பயிற்சியெடுத்து, மண்டல அளவிலும் மாவட்ட அளவிலும்

வெற்றி பெற்று, மாநில மற்றும் தேசிய அளவில் போட்டிகளில் விளையாட வேண்டும். அதிக வெற்றிகளைக் குவித்து, நீ படிக்கும் கல்லூரிக்கும், உன் பெற்றோருக்கும் பெருமை சேர்க்க வேண்டும் என்று உன்னை வாழ்த்துகிறேன். நேரில் சந்திக்கும் வரை கடித உரையாடல் தொடரட்டும். உன் பதில் கடிதத்திற்குக் காத்திருக்கிறேன்.

**இப்படிக்கு,**

**உன் அன்பு தோழி,**

**ஏ. ரம்யா, இளங்கலைத் தமிழ், முதலாமாண்டு**

## சிறுகதை

### கடைசி காலம்

ஓர் அழகான கிராமம். விவசாய நிலங்களும், நீர் நிலைகளும், சோலைகளும், நிறைந்து இயற்கை எழில்கள் சூழ்ந்து காணப்படுகின்ற அக்கிராமத்தின் ஊர் நடுவே பெரிய ஆலமரம் ஒன்று உள்ளது. அங்கு எப்பொழுதும் குழந்தைகளின் சிரிப்பொலி கேட்கும். விடுமுறை நாட்கள் வந்தாலே போதும் குழந்தைகள் கூட்டம் அங்கே கூடிவிடும். இம்முறை கோடை விடுமுறை என்பதால் தினமும் குழந்தைகள் அங்கு வந்து விளையாடுகின்றனர்.

ஒரு நாள் ரவி தன்னுடைய நண்பர்களான அலி, ஜோசப், சூர்யா, கண்ணன் ஆகியோருடன் விளையாட ஆலமரத்திற்குச் சென்றான். அனைவரும் ஆலமரத்தடிக்கு வந்த பிறகு என்ன விளையாடலாம்? என்று ஆலோசனை செய்தனர். அலி சொன்னான் கில்லி விளையாடலாம் என்று, அதற்கு ஜோசப் அவ்விளையாட்டு வேண்டாம் கபடி விளையாடலாம் என்று கூறினான். சூர்யா கபடி விளையாட வேண்டுமென்றால் அதிக நபர்கள் தேவைப்படுவார்கள். அதனால் அவ்விளையாட்டும் வேண்டாம். நாம் இந்த மரத்தின் விழுதுகளைப் பிடித்து தொங்கி விளையாடலாம் என்று கூறினான். மற்ற அனைவரும் இது நல்ல யோசனை இந்த விளையாட்டே நாம் விளையாடலாம் என்று விளையாடினார்கள். சிறிது நேரம் கழிந்ததும் சோர்வாகவே அனைவரும் அந்த மரத்தடியில் ஓய்வு எடுத்தனர்.



அப்பொழுது யாரோ ஒருவர் புலம்பும் குரல் ரவிக்குக் கேட்டது. அதைத் தன் நண்பர்களிடம் சொன்னான். அனைவரும் யாராக

இருக்கும் என்று சுற்றித் தேடினர். அப்பொழுது அந்த ஆலமரத்தின் அருகே இருந்த குளக்கரையில் ஒரு வயதான பாட்டி உட்கார்ந்திருப்பதைக் கண்டனர்.

அப்பாட்டி கோலி குண்டு போன்று கண்களை உடையவளாக, தலையெல்லாம் நரைத்தும், கிழிந்த ஆடைகளை அணிந்தும் காணப்பட்டாள். அவள் அருகில் ரவியும் அவன் நண்பர்களும் சென்றனர். நீங்கள் யார் பாட்டி? உங்களுக்கு என்ன ஆயிற்று? ஏன் இங்கே தனியாக உட்கார்ந்து உள்ளீர்கள்? என்று ரவி கேட்டான். ரவியையும் அவன் நண்பர்களையும் பார்த்த பாட்டி உடனே கண்களில் நீர் பெருகி அழுதாள். ஏன் பாட்டி அழுகிறீர்கள்? அழாதீர்கள் பாட்டி என்று சூர்யா கூறினான். பாட்டி, உங்களெல்லாரையும் காணும் போது என்னுடைய பேரப்பிள்ளைகளின் ஞாபகம் வந்துவிட்டது அதனால்தான் அழுதுவிட்டேன் என்றாள். உங்கள் பெயர் என்ன பாட்டி? நீங்கள் எங்கியிருந்து வருகிறீர்கள்? என்று அலி கேட்டான்.

என் பெயர் கஸ்தூரி. நான் 40 வருடங்களுக்கு முன்னால் திருமணமாகி இந்த ஊருக்கு வந்தேன். எனக்கு மூன்று பிள்ளைகள். என் கணவர் தபால்காரராகப் பணியாற்றி வந்தார். ஒருநாள் தபால் எல்லாம் போட்டுவிட்டு வீடு திரும்பும் பொழுது ஒரு லாரிக்காரன்

குடித்து விட்டு வேகமாக வண்டியை ஓட்டி வந்து என் கணவன் மீது மோதி விபத்து ஏற்படுத்தினான். சம்பவ இடத்திலே என் கணவர் இரத்த வெள்ளத்தில் இறந்துவிட்டார். அதன்பின் குடும்பம் வறுமையில் வாடியது. என் குடும்பத்தைக் காப்பாற்ற நான் வீட்டுவேலைகளுக்குச் சென்றும், செங்கல் சூலையில் வேலைக்கும் சென்றேன். என் பிள்ளைகளைப் படிக்க வைத்து வளர்த்தேன். பிள்ளைகள் வளர்ந்தனர்.

மூத்த மகன் ராமுக்கு என் கணவரின் வேலையே கிடைத்தது. இரண்டாம் மகன் ராஜா பள்ளியில் ஆசிரியராகப் பணிபுரிகிறான். மூன்றாம் மகன் ராஜேஷ் ரேசன் கடையில் ஊழியராகப் பணிபுரிகிறான். மூவருக்கும் திருமணமாகி குழந்தைகளும் உள்ளனர். எனக்கு, என் பேரப்பிள்ளைகள் என்றால் மிகவும் பிடிக்கும். அவர்களுக்கும் நான் என்றால் அவ்வளவு பிடிக்கும். என் கூடவே எப்பொழுதும் இருப்பார்கள். பள்ளிக்குச் சென்று வந்தாலும் என் கூடவே விளையாடி சாப்பிட்டு உறங்குவார்கள். காலங்கள் செல்ல செல்ல என்னை நோய்கள் தாக்கின. முதலில் சர்க்கரை நோய் தாக்கியது. பின் எனக்கு நுரையீரல் புற்றுநோய் வந்தது. இந்நோயின் தாக்கத்தால் என் மருமகள்கள் என்னிடமிருந்து பேரப்பிள்ளைகளைப் பிரித்தனர். என் மூச்சுக்காற்று பட்டாலும் என்னிடம் இருந்தாலும்

அவர்களையும் நோய் தாக்கிவிடும், என்று பல்வேறு காரணங்கள் கூறி என்னிடம் பேரப்பிள்ளைகளை விளையாட விடவில்லை. பின் எனக்கு உணவு வழங்காமலும் இருந்தார்கள். இறுதியில் உன்னை எங்களால் பார்த்துக்கொள்ள முடியாது என்று கூறி வீட்டை விட்டு வெளியே அனுப்பிவிட்டார்கள். எனக்கு எங்கு செல்வது என்று தெரியாமல் சுற்றித்திரிந்த போது இந்த ஆலமரத்தைக் கண்டேன். பிறகு இங்கேயே என் கடைசி காலத்தைப் போக்கி விடலாம் என்று எண்ணி இங்கே இருந்துவிட்டேன். இப்பொழுது உங்களைக் கண்டதும் என் பேரப்பிள்ளைகள் நினைவு தோன்றியதால் அழுகை ஏற்பட்டது அதனால் தான் அழுதுவிட்டேன் என்று கஸ்தூரி பாட்டி கூறினாள்.



பி. கீர்த்திகா
இளம் வணிகவியல், முதலாமாண்டு

பாட்டியின் கதையைக் கேட்ட பிள்ளைகள் அனைவரும் கவலைப்படாதீர்கள் பாட்டி இனி உங்களுக்கு நாங்கள் இருக்கிறோம். இனிமேல் நாங்கள் தான் உங்கள்

பேரப்பிள்ளைகள் என்று கூறினார்கள். பிறகு பாட்டியுடன் சேர்ந்து விளையாடினார்கள்.

அன்று முதல் தினமும் பிள்ளைகள் பாட்டியுடன் விளையாடினார்கள். பாட்டிக்கு உணவு வழங்கினார்கள். விடுமுறை முடிந்து பள்ளிகள் மீண்டும் திறக்கப்பட்டன. பிள்ளைகள் பள்ளிகளுக்குச் சென்று வந்தவுடனே ஆலமரத்திற்குச் சென்று பாட்டியுடன் பேசியும், விளையாடியும், அவர்களின் பசியைத் தீர்த்தும் அவர்களின் குடும்ப நினைவுகள் தோன்றாமல் பார்த்து கொண்டார்கள்.

இவ்வாறு பல நாட்கள் கடந்தன. வழக்கம் போல் பிள்ளைகள் பள்ளி முடிந்து பாட்டியைக் காண வருகையில் அங்கு, பாட்டி இல்லை. பிள்ளைகள் சுற்றிமுற்றி பார்க்கையில் கண்ணிற்கு எட்டிய தொலைவு வரை பாட்டி தென்படவில்லை. அப்பொழுது அவ்வழியே சென்ற ஒருவரிடம் இங்கே கஸ்தூரி பாட்டி இருந்தார்களே அவர்கள் எங்கே சென்றார்கள் என்று உங்களுக்குத் தெரியுமா? என்று கேட்டனர். அந்த நபர் நான் காலையில் இவ்வழியே நடைப்பயிற்சி மேற்கொள்ளும் போது இங்கு ஒரே கூட்டமாக இருந்தனர். அங்கு சென்று பார்க்கையில் அந்தக் கஸ்தூரி பாட்டி இறந்து போய் இருந்தார்கள்.

ஊர்மக்கள் சேர்ந்து 108 ஆம்புலன்சை வரவைத்து அவர்களை ஏற்றி அனுப்பிவிட்டார்கள். இப்பொழுது அவர்களைத் தகனம் செய்து இருப்பார்கள் என்று கூறியதைக் கேட்டதும் ரவி மற்றும் அவனின் நண்பர்கள் அனைவரும் சோகத்தில் மூழ்கினர். கண்களில் நீர் பெருக கஸ்தூரி பாட்டி தங்கியிருந்த அவ்விடத்தையே நோக்கினர்.

அப்பொழுது அவர்களின் மனதில் நாம் இதுபோன்று நம் பெற்றோர்களை வயதான காலத்தில் வீட்டை விட்டு வெளியே அனுப்பாமல், பத்திரமாகப் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று அந்த இளம் உள்ளங்கள் உறுதி பூண்டன.

**மா.ஜெகதீஸ்வரி, முதுகலைத்தமிழ், முதலாமாண்டு.**

## விடுகதை - விடைகள்

மரம்-கரி-நெருப்பு, இரகசியம், ஈசல், வத்தல் மிளகாய், மேகம்- மழை, ஆபத்து, நண்டு, கல்வி, தேன், நுங்கு.

## சொல் விளையாட்டு

கட்டத்தில் மறைந்துள்ள மறந்த விளையாட்டுகளைக் கண்டறிக.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| க | ந் | ழி | கு | ங் | லா | ல் | ப |
| ப | ச் | ச | கு | தி | ரை | வ | ட் |
| ற் | ச | ச் | கோ | | கூ | ந | ட |
| ஆ | டு | பு | லி | யா | ட் | ட | ம் |
| ச | கு | வ | கு | த | டா | ற | ய |
| டு | டு | எ | ண் | ல | ஞ் | த | தா |
| மூ | ன | ம | டு | உ | சோ | ர | ள |
| ரூ | ஒ | டி | றி | இ | று | ப | க |
| ட | ண் | ய | அ | ல் | ச | ஞ் | ஊ |
| பா | டி | டு | ண் | த | லி | ல் | கி |
| க | க | ச | ப | ர | ழ | ப | ட |
| ழ | த | எ | ன | உ | அ | த | ந |

து. லீலாவதி, இளங்கலைத்தமிழ், இரண்டாமாண்டு

## கவிதைகள்

### இயற்கையின் அதிசயமே!

மழையே மழையே!
உன்னைத் தொட்டுப் பார்க்க நினைத்தேன்
நீயோ என்னை நனைத்து விட்டாய்....
சோகத்தால் நான் மூழ்கியிருந்தாலும்
உன் சாரலால்
என்னைச் சிரிக்க வைப்பாய்....
கோடைக் கொடுமை செய்த போதிலும்
கோடை மழையாலே
கோபுரங்கள் கட்டுவாய்...
நீ செய்யும் அற்புதத்தாலே
இவ்வையமும் வியக்கிறது
இந்திரனும் வியக்கிறான் ஏன்?
நீ இயற்கையின் அதிசயமே!....

**பா.லோகேஸ்வரி, இளங்கலைத் தமிழ், மூன்றாமாண்டு**

# நினைவுகள்

கல்லூரிக் காலம்
கால் முளைத்துத் தரையிரங்கி
விண்மீன் வந்து வாழ
ஏங்கும் வசந்த காலம்
மீண்டும் காணக் கண்கள் ஏங்கும்
இனிமைக் காலம்...
பிரிவேதுமில்லா
பொது ஆலயம் கல்லூரி
பெரிதாய் விரிந்த நந்தவனத்தில்
புதிதாய்
பிறந்த பூக்களானோம்
நட்பில் கரைந்து

சோகம் மறந்து
சொந்தம் கொண்டாடிய
சொர்க்க மாளிகை
கனவுகள் விரிந்ததும் அங்கேதான்
கற்பனை மலர்ந்த்தும் அங்கேதான்



எபிஷா. ம,
இளங்கலை ஆங்கிலம், முதலாமாண்டு

நட்பு வட்டத்தில் நம்பிக்கை உதித்து
நங்கூரம் ஆனதும் அங்கேதான்…
சின்னஞ்சிறு குறும்பில் விளைந்த
அறும்பு மகிழ்வுகள் ஏராளம்
அன்போடு அக்கறை பொழிந்த
ஆசான்கள் அங்கே தாராளம்
பேருந்துப் படிகளில் தொங்கி
பயந்து பயணித்த அனுபவங்கள்!!!
இன்று
அத்தனை மகிழ்வும்
நினைவுகளில் மட்டும்….

**வனிதா. ஐ, இளங்கலைத் தமிழ், இரண்டாமாண்டு**

## பணம்!!!

போகாத இடமில்லை
தொடாத மனிதரில்லை
சாதி மதம் பார்க்கவில்லை
நல்லவர் கெட்டவர் என அறியவில்லை
ஏழை பணக்காரன் வேறுபாடில்லை

சில நேரம் துக்கத்தைக் கொடுக்கும்
சில நேரம் மகிழ்ச்சியைக் கொடுக்கும்
படித்தவரிடமும் இருக்கும்
அறிவு இல்லாதவரிடமும் இருக்கும்
பிறப்பு முதல் இறக்கும் வரை
இதனுடனே பயணிக்கும் கட்டாயம்
இதனை வைத்துப் பசியாரலாம்
வைத்திருப்பதைப் பொருத்து
இதன் தன்மையும் மாறும்
அனைவரும் வேண்டுவது
அனைவருக்கும் தேவைப்படுவது
இதன்மேல் ஆசை அதிகரித்தால்
ஆபத்தும் அதிகரிக்கும்
தேவைக்குக் கொண்டு
ஆசை குறைந்தால்
இன்ப வாழ்வு கிட்டும்
ஆசை பெருக இதன் தேவை வளர
இன்பம் அழியும்.....



எஸ். கோகிலா
இளம் வணிகவியல், முதலாமாண்டு

**செ. ரூபிகா, இளங்கலைத் தமிழ், இரண்டாமாண்டு**

## தகவல் களஞ்சியம்

- வானவில் சில நிமிடங்களே தெரிவது வழக்கம். ஆனால் 1979ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 14ஆம் நாளன்று இங்கிலாந்தின் வேல்ஸ் அருகே கிளைடு என்ற இடத்தில் தோன்றிய வானவில் 3 மணி நேரம் வானில் இருந்தது. உலக வரலாற்றிலேயே அதிக நேரம் நீடித்த வானவில் இதுதான்.
- நள்ளிரவில் சூரியன் உதிக்கும் நாடு நார்வே. இங்கு கோடைக் காலத்தில் தொடர்ந்து 105 நாட்களுக்குச் சூரியன் பிரகாசித்துக் கொண்டே இருக்கும்.
- உலகில் உள்ள அனைத்துப் பனிக்கரடிகளும் இடதுகை பழக்கம் உள்ளவை.
- ஆஸ்திரேலியாவில் உள்ள கோலா எனப்படும் கரடி இனம் தண்ணீர் குடிப்பதில்லை. வெறும் யூக்கலிப்டஸ் மரத்தின் பட்டையைத் தின்றே உயிர் வாழ்கின்றன.
- முகவரியுடன் சேர்த்து எழுதும் பின்கோடில் உள்ள 6 எண்களில் முதல் எண் மாநிலத்தையும், அடுத்த இரண்டு எண்கள் துணை வட்டத்தையும், கடைசி 3 எண்கள் குறிப்பிட்ட தபால் நிலையத்தையும் குறிக்கிறது.

**ரோ. ஷீலா, இளங்கலைத் தமிழ், முதலாமாண்டு**

## துறை நிகழ்வுகள்

- தமிழ்த்துறையில் 01.01.2023 அன்று சுவாமி விவேகானந்தரின் பிறந்த நாளான தேசிய இளைஞர் நாளை முன்னிட்டு தமிழும் சமயமும் அறிவியலும் என்ற தலைப்பில் பன்னாட்டுக் கருத்தரங்கம் நடத்தப்பெற்றது. ஜப்பானிய எண்ணெய் மற்றும் எரிவாயு பன்னாட்டு நிறுவனத்தின் தர நிர்ணயத் துறைத் தலைவரும் (ஓய்வு), சிங்கப்பூர், திருமுறை மாநாட்டு ஏற்பாட்டுக் குழு உறுப்பினருமான உயர்திரு எல். வெங்கடராமன் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.






- துறையில் 09.02.2023 அன்று ஒரு நாள் பயிலரங்கம் நடத்தப்பெற்றது. ஊடக வேலைவாய்ப்பு, திரைக்கதை உருவாக்கம் மற்றும் திரைப்பட இயக்கம் என்ற தலைப்பில் நடைப்பெற்ற பயிலரங்கிற்கு, சென்னை,






டிசேல்ஸ் சர்வதேசத் திரைப்படம் மற்றும் மீடியா அகாதெமியின் கல்விப்புல இயக்குநர் மற்றும் திரைப்பட இயக்குநர், பேராசிரியர் எஸ். ஜெயக்குமார் லாரன்ஸ் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு பயிலரங்கை நடத்தினர்.


- 10.02.2023 அன்று திருக்குறள் விழாவை முன்னிட்டு மாணவியருக்குக் கவிதை, பாட்டு, ஓவியம், வினாடி வினா, குறும்படம் ஆகிய போட்டிகள் நடத்தப்பெற்றன.








- தமிழ்த்துறையும் கனடா, டோ அறக்கட்டளை ஒரு ரூபாய் அறிவியல் தமிழ் மன்றம் மெய்நிகர் அறிவியல் தமிழிருக்கையும் இணைந்து 10.02.2023 அன்று நடத்திய 44வது மாணவர் மெய்நிகர் தமிழுரை நிகழ்ச்சியில் சோகா இகெதா கல்லூரியின் தமிழ்த்துறை, இளங்கலைதமிழ் மூன்றாமாண்டு பயிலும் மாணவி ரா. பிரியதர்ஷினி பழந்தமிழரின் வணிக மரபு எனும் தலைப்பில் ஆய்வுரை வழங்கினார்.



- தமிழ்த்துறையில் 21.02.2023 அன்று உலகத் தாய் மொழி நாள் விழா கொண்டாடப்பெற்றது. விழாவில் வில்லிவாக்கம் சிட்கோ நகர் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, தமிழ்த்துறை முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் திருமதி கோ. இராஜலட்சுமி, சென்னை, அன்னை வயலட் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் இந்தி மொழித்துறைத் தலைவர் முனைவர் கே.எ.சதி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். இவ்விழாவை முன்னிட்டு கல்லூரி மாணவியர் அனைவரும் பங்குபெறும் வகையில் தாய்மொழியில் கையெழுத்திடுவோம் என்ற நிகழ்வு நடைபெற்றது. மேலும், மாணவியர் தாய்மொழியின் இன்றியமையாமையை வலியுறுத்தும் சுவரொட்டிகளைத் தயாரித்துக் காட்சிப்படுத்தினர்.






- 23.02.2023 அன்று தமிழ்த்துறையின் இளங்கலை மற்றும் முதுகலை மாணவியர் மற்றும் பேராசிரியர்கள் எழும்பூர், கன்னிமாரா பொது நூலகத்தைப் பார்வையிட்டனர்.


  மாணவியர் நூலகத்திலுள்ள போட்டித் தேர்வு நூல்கள், இதழ்கள், இலக்கிய இலக்கண வரலாற்று நூல்களைப் படித்துப் பயன்பெற்றனர்.




- 25.03.2023 அன்று தமிழ்த்துறை மாணவியர் கல்விச் சுற்றுலாவாக மாமல்லபுரம், திருவிடைமருதூர் கோவில் ஆகிய இடங்களுக்குச் சென்று வந்தனர்.







# நற்றமிழ்க்குடில்

## தமிழால் தழைக்கும் உலகு

### மாணவ இலக்கிய மின்னிதழ்




தமிழ்த்துறை

சோகா தமிழ்ப் பேரவை வெளியீடு

சோகா இகெதா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி

சேது பாஸ்கரா நகர், மாதனாங்குப்பம், சென்னை 600 099.

sokatamilavai2023@gmail.com

sokaikeda2000@gmail.com